2.DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.243/2019

PROSECUTION WITNESS L.W.8/P.W.6

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சுதாகரன் | **Caste** | : |
| **Father's Name** | : அங்கமுத்து | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 26.12.2024

முதல் விசாரணை

1) நான் தற்போது சென்னையில் குடியிருந்து கொண்டு பேங்கில் வேலை செய்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன்.

2) என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2018 ம் வருடம் நான் ஈரோடு விக்ரம் காம்ப்ளக்சில் குடியிருந்து வந்தேன். 21.07.2018 ம் தேதி நானும், மதுசூதனன் என்பவரும் ஈரோடு பெருந்துறை ரோடு, பரிமளம் மகால் அருகே வாக்கிங் சென்று கொண்டிருந்தோம். அப்போது வடக்கு காவல்நிலைய போலீசார் அங்கு நகை திருடு போனது சம்மந்தமாக சம்பவ இடமான பரிமளம் மகால் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து கொண்டிருந்தனர். அதில் நானும், மதுசூதனனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். (**21.07.2018 ம் தேதியிட்ட பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) புகார்தாரர் புஷ்பாவும் நானும் ஒரே அபார்ட்மென்டில் குடியிருந்து வருகிறோம் என்றால்

சரிதான். அவர் எனக்கு 3 வருடங்களாக பழக்கம். நான் கையொப்பம் செய்துள்ள பேப்பரில் உள்ள முழு விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புஷ்பா எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.